# டாக்டர் தி.சு.அவினாசிலிங்கத்தின் 123வது பிறந்த நாள் விழா




கோவை, மே. 6

அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்கள் சார்பாக அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் தி.சு.அவினாசிலிங்கத்தின் 123வது ஆண்டு பிறந்தநாள் விழா உயர்தொழில்நுட்பக் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிறுவனத்தின் வேந்தரும், அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலருமான முனைவர் தி.ச.க.மீனாட்சிசுந்தரம் விழாவிற்குத் தலைமை தாங்கினார். அவர் தமது உரையில், மகளிர் கல்விக்காக பாடு பட்ட மாமனிதர். உழைப்பினாலும் விவேகத்தாலும் அனைத்து செயல்களிலும் அரும் பெரும் சாதனைகளை நிகழ்த்திய தி.சு.அவினாசிலிங்கத்தின் தியாகங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினரான கல்வி ஆலோசகர் தங்க வீரப்பன் தி.சு.அவினாசிலிங்கம் நாட்டுப்பற்றோடு திகழ்ந்தவர் என்றும் நாட்டிற்காக சிறைச் சென்றவர் எனவும் சுவாமி விவேகானந்தர் மீதும் இராமகிருஷ்ண பரமஹம்சர் மீதும் பெரிதும் ஈர்க்கப்பட்டு தனது வாழ்க்கையையே சமுதாயத்திற்காக அர்ப்பணித்தவர் என்றும் கூறினார்.

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் துணைவேந்தர் முனைவர் பாரதி ஹரிசங்கர் இந்நிறுவனத்தில் 3 பன்னாட்டுக் கருத்தரங்கங்கள், 11 தேசியக் கருத்தரங்கங்கள், 67 பயிலரங்கங்கள், 59 கருத்தரங்குகள், 154 சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றது குறித்து பேசினார்.

தொடர்ந்து மண்டபத்திலுள்ள அய்யா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் எச்.இந்து வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியின் நிறைவாக மாணவியர் நலன் புல முதன்மையர், பேராசிரியர் முனைவர் வாசுகி ராஜா நன்றியுரை வழங்கினார்.